திரு. து. ப. அழகமுத்து : வீட்டில் பால் ஊற்றும் முறையை நிறுத்தியது எப்போது ? அதற்காக வசூலிக்கப்பட்ட பணத்தில் முதல் பாதி கொடுக்கப்பட்டது எப்போது ? பிற்பாதி எப்போது கொடுக்கப்படும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒரு பாதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : மாதவரம் பால் பண்ணையில் பால் வியாபாரம் லாபத்தில் நடந்துகொண்டிருக்கிறதா ? அல்லது நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சபையில் ஓர் அறிக்கை வைத்திருக்கிறேன். அதைப் படித்துப் பார்த்தால் தெரியும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : பால் பண்ணை ஆரம்பிக்கும்போது நகரப் பகுதிகளில் மக்களோடு மாடுகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள் என்பதால் மாடுகளை எல்லாம் அகற்றவேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் மாடுகள் குறைந்தபாடில்லை. குறிப்பாக என் தொகுதியில் மக்களோடு மாடுகளும் சேர்ந்திருக்கும் சூழ்நிலை இருக்கிறது. இது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நல்ல பால் பண்ணையை சென்னை நகருக்கு அருகாமையில் வைக்கவேண்டுமென்று கருதி அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. சென்னையில் உள்ளவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. அதைப் பயன்படுத்தாமல் இன்னும் சிலர் நகரத்தில் மாடுகளை வைத்துக்கொண்டு பால் உற்பத்தி செய்து விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மாதவரம் பால் பண்ணையில் அநேக மாடுகள் நோயால் இறந்து விட்டது என்பது உண்மையா ? அப்படியானால் எவ்வளவு மாடுகள் இறந்து போய்விட்டன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இங்கு வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் எல்லா விவரங்களும் இருக்கின்றன.

திரு. கே. ஏ. மதியழகன் : மாதவரம் பால் பண்ணையில் ஏற்பட்டிருக்கும் நஷ்டம் சாதாரண நஷ்டமா ? பலத்த நஷ்டமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த விவரம் பூராவும் அறிக்கையில் இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தால் அங்கத்தினர் ஒரு முடிவிற்கு வரலாம்.

Dam across Chinnar River

* 299 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the estimates for the construction of a dam across river Chinnar in Dharmapuri taluk have been prepared; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Scheme is estimated to cost Rs. 40·50 lakhs. It consists of construction of a dam across the Chinnar river near Panchapalli in Hosur taluk, Salem district, with a capacity of 350 M.cft. (with an annual utilisation of 250 M.cft. and carry over of 100 M.cft.) and to excavate a canal from the present head sluice at the right flank of Jarthalev tank in Dharmapuri taluk to irrigate

an extent of 1,190 acres new and to stabilise 2,626 acres of existing wet. It is proposed to consider the scheme for inclusion in the Fourth Five-Year Plan.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தத் திட்டத்திஞல் எவ்வளவு ஆயிரம் எக்கர் நிலங்கள் பயனடையும் என்று ஏதாவது எஸ்டிமேட் தயாரிக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : புதிதாக **1190** ஏக்கர் பாசனவசதி பெறும் வெட் ஆயக்கட்டில் **2,626** ஏக்கர் ஸ்டபிலேஸ்.

Second stage of Sathanur Dam

* 300 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) the details of the Second Stage of the Sathanur Dam; and

(*b*) the benefits to accrue therefrom?

THE HON. SRI V. RAMIAH : (*a*) & (*b*)—

The answer a is placed on the table of the House.

* 301 *Q*.—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Sathanur Dam II Stage has been completed;

(*b*) whether there is any proposal to take up investigation of the right bank channel of the dam; and

(*c*) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The second stage of the Sathanur Reservoir Project is nearing completion.

(*b*) Not at present.

(*c*) This question does not arise.

திரு. எஸ். முருகையன் : இப்போது கொள்ளளவு 43 லட்சம் கன அடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் நிலே முடிவடைந்த வுடன் 81 லட்சம் கன அடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல் 5,000 ஏக்கர் தான் மேற்கொண்டு பாசன வசதி செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். ஆகவே அதிகப்படி பாசன வசதி செய்யமுடியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போதுள்ள விவரப்படி இவ்வளவு தான் செய்ய முடியும். மேற்கொண்டு செய்யவேண்டுமென்ருல் அதை பரிசீலனே செய்ய வேண்டும். போதுமான இடம் இருந்தால் இன்னும் அதிகமாகச் செய்யலாம். இப்போதுள்ள ஆராய்ச்சிப்படி, ஆராய்ச்சி செய்யப்பட்டு இன்வெஸ்டிகேஷன் முடிந்து திட்டம் இன்று கிட்டத்தட்ட நடைமுறையில் வந்து விட்டது. இதற்கு **5,000** தான் நிர்ணயம் செய் திருக்கிருர்கள்.

---

a printedx as Appendi II'on page 412